# வணிகவரித் துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு த. ஜேக்கப், இ.ஆ.ப.,<br>ஆணையர் (வணிக வரி),<br>சேப்பாக்கம்,<br>சென்னை—5 | திருவா. ஆர்.சி.சி.பைப்ஸ் மற்றும் சிமெண்ட் காங்கிரீட் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம்,<br>எண் 16ஜி, புகளூர், S.F.P.O.639 113,<br>கரூர் மாவட்டம் (இணைப்புடன்) |

க.எண். மகூவ / 6963 / 2007 / அ3(VCC 942). நாள் 21.8.2007.

ஐயா,

பொருள்— தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006 – திருவா. ஆர்.சி.சி.பைப்ஸ் மற்றும் காங்கிரீட் உற்பத்தியாளர்கள் சங்கம், புகளூர், கரூர் மாவட்டம் – வரிவிலக்கு கோரியது – தொடர்பாக.

பார்வை — இவ்வலுவலக கடித எண். ம.கூ.வ..பிரிவு /6963/2007 (VCC 942) நாள் 17.7.2007.

----

திருவா. ஆர்.சி.சி.பைப்ஸ் மற்றும் சிமெண்ட் காங்கிரீட் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் அவர்கள் தங்களின் 5.2.2007 நாளிட்ட கடிதத்தில் கையினால் தயார் செய்யும் பொருட்களான ஜன்னல், கிராதி, தூண், தரைக் கற்கள், கழிவு நீர் வடிகால் கான்கிரீட் கற்கள் ஆகியவற்றிற்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அல்லது மிகக் குறைந்த வரிவிகிதம் நிர்ணயித்திடுமாறு கோரி இருந்தனர்.

இவ்வலுவலக கடித எண்.ம.கூ.வ.பிரிவு / 6963 / 2007 (VCC 942), நாள் 17.7.2007ல் பத்தி இரண்டில் ஆர்..சி.சி.ஜாலி, கதவு மற்றும் ஜன்னல்களுக்கு சிமெண்டிற்கு கொள்முதலில் செலுத்திய வரியை உள்ளீட்டு வரிவரவாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையுடன் வரிவிலக்கு ஏற்கனவே வழங்கப்பட்டது என தவறாக தெரியப்படுத்தப்பட்டது.

அது கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

“ஆர்.சி.சி.ஜாலி, கதவு மற்றும் ஜன்னல்களுக்கு சிமெண்டிற்கு கொள்முதலின்போது செலுத்திய வரியை உள்ளீட்டு வரிவரவாக

எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையுடன் 4% வரி விதிக்கப்படுகிறது ".

இத்துடன் இது சம்பந்தமாக அரசாணை இணைக்கப்பட்டுள்ளது.

ஒம் . / சு. சண்முகம்,
வணிக வரி ஆணையருக்காக

நகல்–அரசு செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

வணிக வரி அலுவலர் (மதிப்புக் கூட்டு வரி)